# கருவூலக் கணக்கு துறை

அனுப்புநர்
திரு.K.விஜயேந்திர பாண்டியன், இ.ஆ.ப.,
ஆணையர்,
கருவூலக் கணக்கு ஆணையரகம்,
(ப.ஓ.தி பிரிவு), 571, 5 வது தளம்,
பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை,
நந்தனம், சென்னை -35.

பெறுநர்
அனைத்து சம்பள கணக்கு அலுவலர் /
மாவட்ட கருவூல அலுவலர்

www.Padasalai.Net

**ந.க.எண்.1299356/ ப.ஓ.தி. /2023, நாள்: 15 .05.024**

ஐயா/அம்மா,

பொருள் : களஞ்சியம் - பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் - ஓய்வூதிய முன்மொழிவு அனுப்புதல் தொடர்பான வழிமுறைகள் தெரிவித்தல் - தொடர்பு

பார்வை : 1. அரசு ஆணை எண்.59 நிதி (பிஜிசி) துறை, நாள்: 22-02-2016,
2. தொடர்புடைய ஆவணங்கள்

-------

பார்வையில் காணும் ஆணையில் 01.04.2003 பிறகு தமிழ்நாடு அரசு பணியில் சேர்ந்த அலுவலர்கள், ஆசிரியர்களுக்கு, பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பிடித்தம் செய்யப்பட்ட தொகை பெறுவதற்கு தபால் (Offline) மூலம் ப.ஓ.தி முன்மொழிவுகள் இவ்வலுவலகத்திற்கு பெறப்பட்டு, வந்த நிலையில் இனிவரும் காலங்களில் களஞ்சியம் இணையதளத்தின் வாயிலாக ப.ஓ.தி முன்மொழிவுகள் அனுப்புவதற்கு ஏதுவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தங்களின் கட்டுபாட்டின் கீழ் வரும் அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலகத்திலிருந்து அனுப்பபட வேண்டிய அனைத்து ப.ஓ.தி முன்மொழிவுகளும் களஞ்சியம் இணையதளத்தின் வாயிலாக அனுப்புமாறு அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களையும் அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் களஞ்சியம் இணையதளத்தில் வாயிலாக அனுப்பப்பட்ட ப.ஓ.தி முன்மொழிவுகளை தபால் வழியாகவும் அனுப்புமாறு அனைத்து பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும் அறிவுறுத்துமாறு, அனைத்து சம்பள கணக்கு அலுவலர் / மாவட்ட கருவூல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், களஞ்சியம் இணையதளத்தின் வழியாக பஓ.தி முன்மொழி அனுப்புவதற்கான வழிமுறைகளை இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு : ப.ஓ.தி முன்மொழிவு
அனுப்புவதற்கான வழிமுறைகள்

ஒப்பம்
ஆணையர்
கருவூலக் கணக்கு துறை

அ. அர்ச்சனா
15/5/24
கூடுதல் இயக்குநர்(தே.ஓ.தி)

15.5.24

நகல் :

1. கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)
2. கூடுதல் இயக்குநர் (மின் ஆளுகை)
3. அனைத்து மண்டல இணை இயக்குநர்கள்.

## பங்களிப்பு ஓய்வூதிய திட்ட முன்மொழிவு IFHRMS – மூலமாக அனுப்புவதற்கான வழிமுறைகள்:

www.Padasalai.Net

1. ப.ஓ.தி பணியாளர் ஓய்வுபெற்ற பின் களஞ்சியம் இணையதளத்தில் ஓய்வு பெற்றதற்கான / விருப்ப ஓய்வு பெற்றதற்கான / இராஜினாமா செய்தற்கான பதிவுகளை களஞ்சியம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

HR –> Pre Retirement
- → Retirement Type & Retirement Order –> Review –> Submit
- → Death Entry –> Review –> Submit

2. ப.ஓ.திட்டத்தில் ஓய்வு பெற்ற பணியாளர்கள், அரசாணை எண் 59. நிதி துறை நாள் 22.02.2016–ல், இணைக்கப்பட்டுள்ள ப.ஓ.தி முன்மொழிவு விண்ணப்பத்தினை களஞ்சியம் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

(1) ஓய்வு / விருப்ப ஓய்வு / பணிதுறப்பு / பணி நீக்கம் செய்த பணியாளர்கள் களஞ்சியம் இணையதளத்தில் தங்களது ID–யில்

eService (Hr & Fin) –> Employee Self Service –> CPS –> Reports –> CPS Final Settlement –> Annexure–I (G.O.59 Fin(PGC) Department Date. 22.02.2016.

(2) இறந்த பணியாளர்களுக்கு HR Initiator ID–யில்

HR –> Schemes –> Contributory / New Pension Scheme –> Reports –> CPS Final Settlement –> Anneuxer I ( G.O.59 Fin(PGC) Department Date . 22.02.2016.

3. பதிவிறக்கம் செய்யப்பட்ட CPS Final Settlement – "Anneuxer I (G.O.59 Fin(PGC)) விண்ணப்பத்தினை சரிபார்த்து Signature Of Claimant என்ற இடத்தில் கையொப்பமிட்டு Scan செய்ய வேண்டும் (பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் ஏதேனும் தகவல் விடுப்பட்டு இருந்தாலோ அல்லது தவறாக இருந்தாலோ eSR Update Tool–ல் சரிசெய்து மீண்டும் பதிவிறக்கம் செய்து கையொப்பமிட வேண்டும்)

4. கையொப்பமிட்டு Scan செய்யப்பட்ட CPS Final Settlement – Anneuxer I ( G.O.59 Fin(PGC)) விண்ணப்பத்தினை பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

eService(Hr & Fin) –> Employee Self Service –> CPS –> CPS Final Settlement ESS –> Create –> Review –> Select Approval Group –> Add Attachment –> Choose File (add signed copy) –> Apply –> Submit .